# அமெரிக்க உள்துறை அமைச்சரை மான்டிரிக்ஸ் நகரில் வெளியுறவுத்துறை அமைச்சர் சந்திப்பு

ஜனவரி 22, 2014

சிரியா தொடர்பாக ஜெனிவா-2 கூட்டம் மான்டிரிக்ஸ் நகரில் நடைபெற்று வரும் சூழலில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சல்மான் குர்ஷித் அமெரிக்க உள்துறை அமைச்சர் மேதகு ஜான் கெரியை 2014 ஜனவரி 22ந்தேதி சந்தித்தார்.

இரு அமைச்சர்களும் இந்தியா-அமெரிக்க உறவுகளில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்தனர்.  இருதரப்பு உறவுகள் இரு நாடுகளுக்கும் மிகவும் முக்கியமானது என்று இருவரும் ஏற்றுக்கொண்டனர். இரு தரப்பும் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட பரஸ்பர பரிமாற்றங்களை விரைவாக நடைமுறைப்படுத்த தீர்மானித்தனர். இதில் அமெரிக்க எரிசக்தித்துறை அமைச்ச மொனிஜ், இந்தியா-அமெரிக்க எரிசக்தி பேச்சு வார்த்தையில் பங்கேற்க இந்தியா வருவது மற்றும் அமெரிக்க  உணவு மற்றும் மருந்து நிர்வாக ஆணையர் டாக்டர் மார்கரெட் ஹம்பர்க் ஆகியோர் இந்தியா வருவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்தியா அமெரிக்கா இடையே நடைபெற்று வரும் பாதுகாப்பு ஒத்துழைப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்திய தூதரக அதிகாரி நியூயார்க்கில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட விவாகரம் தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரும் அமெரிக்க உள்துறை அமைச்சரும், இரு நாடுகளுக்கும் இடையேயான தூதரக சலுகைகள் மற்றும் விலக்குகள் குறித்த நிலுவையில் உள்ள பிரச்சினைகளை அமைப்பு ரீதியாக விவாதித்து தீர்வு காண்பது என்றும் அங்கீகரித்தனர். இதன் மூலம் இந்த பிரச்சினைகளை குறித்த நேரத்தில் தீர்க்க முடியும் என்று உணரப்பட்டது. இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகங்களில் உள்ள இந்தியர்களுக்கு வழங்கப்படும் விசாக்கள் குறித்தும் இந்தியா அக்கறை கொண்டுள்ளதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விவகாரங்களில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து தொடர்ந்து கவனிப்பதாக இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

**மான்டிரிக்ஸ்**
**ஜனவரி 22, 2014**